---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசி புறொப்பட்டி டெவெலப்மென்ட் அன்ட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்து குத்தகைதாரர்களுடனான குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் வாடகையானது ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளில் முற்பணமாக செலுத்தப்பட வேண்டிய போதிலும் குத்தகை உடன்படிக்கைகளில் இணங்கப்பட்டவாறு வாடகை செலுத்தப்படாதமையை பின்வரும் வியாபார பெறவேண்டிய நிலுவை மீதிகள் குறிக்கின்றன. 99.9 சதவீதமான நிலுவை குத்தகை வாடகைகள் கொள்ளுப்பிட்டி வணிகக் கோபுர கட்டிடத்திற்கானது என்பதையும் மொத்த நிலுவையில் 80 சதவீதமானவை 90 நாட்களுக்கும் மேலாக நிலுவையாக உள்ளது என்பதையும் இது மேலும் காட்டுகிறது. | பீஓசீ மற்றும் அதன் துணைக்கம்பனிகள் கண்டி பீஓசீ மேர்ச்சன்ட் ரவர் அன்ட் சீபாங்க் ஹவுஸில் பெரும்பாலான இடத்தில் குடியிருக்கின்றன.<br><br>அவை அனைத்தும் ஒரு மாதத்திற்குள் தமது வாடகை/ கட்டணங்களைச் செலுத்தப் பயன்படுத்தப்படுகிறன. | பெறவேண்டிய வாடகைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| விபரம் | நிலுவை மீதி (ரூபா) 1-30 நாட்கள் | 31-60 நாட்கள் | 61-90 நாட்கள் | 90 நாட்களுக்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வணிக கோபுரம் - கொள்ளுப்பிட்டி | | | | | |
| எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட் | 462,712 | 425,543 | 425,180 | 5,658,517 | 6,971,952 |
| சமீரா கேட்டரர்ஸ் | 22,958 | 17,177 | 17,042 | 17,888 | 75,065 |
| கண்டி சீபாங்க் ஹவுஸ் | | | | | |
| இலங்கை வங்கி மத்திய மாகாண அலுவலகம் | 3,310 | - | - | - | 3,310 |
| இலங்கை வங்கி Super Grade கிளை - கண்டி | 2,464 | - | - | - | 2,464 |
| மொத்தம் | **491,444** | **442,720** | **442,222** | **5,676,405** | **7,052,791** |

ஆனால் நாங்கள் வாடகையை திருத்தும் போது, பீஓசீ அவர்களின் அங்கீகாரத்தை இறுதி செய்யும் வரை திருத்தப்பட்ட தொகைகளை வைத்திருக்கின்றது.

எஞ்சினுய்டி பிறைவேட் லிமிட்டட்டின் வாடகை நிலுவைகள் சட்ட வழிகளில் அறவிடப்படும். மேலும் நடவடிக்கை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

சமீரா கேட்டரர்ஸின் நிலுவை தொகை மீளளிக்கத்தக்க வைப்பிலிருந்து முழுமையாக அறவிடப்பட்டிருந்தது.

### 1.6 காசு முகாமைத்துவம்

**கணக்காய்வு விடயம்**

கம்பனி எப்பொழுதும் அதிக நடைமுறைச் சொத்து நிலையைப் பேணி வருகிறதுடன், நீண்ட கால முதலீடுகளில் இலாபம் ஈட்டுவதில் கவனம் செலுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் 2017 முதல் 2020 வரையிலான கடந்த 04 ஆண்டு காலப்பகுதியில் மொத்த சொத்துக்களுக்கான நடைமுறைச் சொத்துகளின் சதவீதம் படிப்படியாக 45 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. எனினும் கம்பனி 2021 ஆம் ஆண்டில் மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் தொகுதிக்கடன்கள் மற்றும் உரிமை மூலதன பங்குகளில் முதலீடு செய்துள்ளது. இதனால் நடைமுறை சொத்து விகிதம் 2021 ஆம் ஆண்டில் 43 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

| விபரம் | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|
| மொத்த சொத்துக்கள் (ரூபா.000) | 2,112,041 | 2,050,868 | 1,927,314 | 1,814,396 | 1,749,625 |
| நடைமுறை சொத்துக்கள் | 901,564 | 1,310,738 | 1,155,591 | 882,841 | 786,667 |

**முகாமைத்துவ கருத்துரை**

முகாமைத்துவம் நீண்ட கால முதலீட்டைக் கருத்தில் கொண்டு இலங்கை வியாபார வங்கியின் தொகுதிக் கடன்கள் மற்றும் உரிமை மூலதன பங்குகளில் செய்கின்ற முதலீடுகள் சிந்தனை செயற்பாட்டின்

**பரிந்துரை**

திரவத்தன்மைக்கும் இலாபத்திற்கும் இடையில் சமநிலையொன்றை பேணுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ரூபா.000) | | | | | ஒரு பகுதியாகும். மேலும் இதுபோன்ற முதலீடுகள் தற்சமயம் நாட்டின் பேரினப்-பொருளாதார நிலைமையை மதிப்பீடு செய்து வருகின்றன. |
| 2,390 | 6,017 | 681 | 1,635 | 22,475 | |
| 883,942 | 1,281,361 | 1,123,089 | 863,099 | 707,412 | |
| 43 | 64 | 60 | 49 | 45 | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 189 மில்லியன் தொகையான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 228 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவுகளில் ரூபா 39 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. நிதி வருமானம் 29 சதவீதத்தால் குறைவடைந்தமை, நிர்வாக மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் 61 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நேரடிச் செலவினங்கள் 12 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன மீளாய்வாண்டில் நிதி விளைவு வீழ்ச்சியடைவதற்கு முக்கியக் காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு, அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **முரண் தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா)** | **முரண் %** | **முரணிற்கான காரணம்** |
|---|---|---|---|
| நிதி வருமானம் - FD மீதான வட்டி | (32,293,272) | (33) | 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் வட்டி விகிதம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. |
| நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் | 6,762,339 | 61 | எஞ்சினுய்டி பிறைவேட் லிமிட்டட்டின் நிலுவைத் தொகைக்காக ஏற்பாடு செய்ததன் காரணமாக அதிகரித்துள்ளது. |
| நேரடி செலவினங்கள் | 4,830,154.00 | 12 | மீளாய்வாண்டில் மின்சாரச் செலவினங்கள் அதிகரித்தமை மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அதிகரித்தமை காரணமாக அதிகரித்துள்ளது. |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டு காலப்பகுதிக்கான கம்பனியின் சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **2021** | **2020** | **2019** | **2018** | **2017** |
|---|---|---|---|---|---|
| தேறியலாப விகிதம் (சதவீதம்) | 64 | 71 | 66 | 67 | 66 |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 18.29 | 23.95 | 34.54 | 32.22 | 14.62 |
| மொத்த சொத்துக்கான தேறிய நடைமுறை சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.40 | 0.61 | 0.58 | 0.47 | 0.44 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ”வங்கியின் மதிப்பீட்டாளர் குழுவில் இருந்து பெறப்பட்ட புதிய மதிப்பீட்டின் படி குத்தகைக்கு வழங்கியவரிற்கும் குத்தகைக்கு பெற்றவரிற்கும் இடையே செய்யப்படும் பரஸ்பர உடன்படிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு இரண்டு (02) ஆண்டுகளின் இறுதியில் வாடகை மீளாய்வு செய்யப்படும்”. எவ்வாறாயினும், பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கியின் மதிப்பீட்டாளர் குழுவிலிருந்து புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை.<br>✓ குவஸ் குறொப் லங்கா லிமிட்டட்<br>✓ சீபாங்க அசற் மனேஜ்மென்ட் பிறைவேட் லிமிட்டட்<br>✓ கொழும்பு பங்கு பரிவர்த்தனை<br>✓ இலங்கை வணிக வங்கி<br>• உடன்படிக்கை இல. 186<br>• உடன்படிக்கை இல. 307<br>• உடன்படிக்கை இல. 205<br>• உடன்படிக்கை இல. 310<br>• உடன்படிக்கை இல. 222<br>• உடன்படிக்கை இல. 206<br>• உடன்படிக்கை இல. 204 | வாடகை மீளாய்விற்காக, தற்போதுள்ள சந்தை விலைவீதங்கள், தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை விலைவிகிதங்கள் ஆகியவற்றை நாங்கள் கருத்தில் கொள்கிறோம். வாடகை மீளாய்வுகளிற்காக பிரத்தியேகமாக தனியான மதிப்பீட்டு அறிக்கையை நாங்கள் பெற்றுக்கொள்வதில்லை.<br><br>அடுத்த புதுப்பித்தலின் போது மேற்படி உட்பிரிவை திருத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். | வாடகை உடன்படிக்கைகளில் உள்ள உட் பிரிவுகளுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | ஒவ்வொரு குத்தகை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்ட பின்னர் குறிப்பிட்ட காணிப் பதிவு அலுவலகத்தில் மூன்று மாத காலப்பகுதிக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் பின்வரும் குத்தகை உடன்படிக்கைகள் | பீஓசீ இன் குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிக்கும் போது, அவர்கள் உரிய மாகாண அலுவலகம் | ஒவ்வொரு குத்தகை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட் |

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| குத்தகை உடன்படிக் கை இல். | குத்தகைக்கு பெற்றவர் | உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்ட திகதி |
|---|---|---|
| 305 | பீஓசீ மேற்கு மாகாணம் | 05/05/2021 |
| 236 | எஞ்சினுய்டி பிறைவேட் லிமிட்டட் | 03/04/2019 |

மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே, செயன்முறை பொதுவாக 3 மாத காலத்தை மீறுகிறது.

மேலும், உடன்படிக்கைகளை புதுப்பித்தலின் போது எஞ்சினுய்டி பிறைவேட் லிமிட்டட்டுடன் எங்களுக்கு தாமதம் ஏற்பட்டதுடன் குத்தகைக்கு பெற்றவருடனான உடன்படிக்கையை நாங்கள் முடிவுறுத்தியுள்ளோம்.

டு மூன்று மாதங்களுக்குள் குத்தகை உடன்படிக்கைகளை காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(iii) குத்தகைக் காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் குறிப்பிட்ட குத்தகைக் காலம் தொடங்கிய பின்னரே குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- பீஓசீ மத்திய அலுவலகம் (உடன்படிக்கை இல. 186)
- பீஓசீ Super Grade - கொள்ளுப்பிட்டி (செயன்முறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது)

பீஓசீ இன் குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிக்கும் போது, உரிய மாகாண அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே, செயன்முறை பொதுவாக 3 மாத காலத்தை மீறுகிறது.

மேலும், உடன்படிக்கைகளை புதுப்பித்தலின் போது எஞ்சினுய்டி பிறைவேட் லிமிட்டட்டுடன் எங்களுக்கு தாமதம் ஏற்பட்டதுடன் குத்தகைக்கு பெற்றவருடனான உடன்படிக்கையை நாங்கள் முடிவுறுத்தியுள்ளோம்.

குத்தகை காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (iv) | அனைத்து குத்தகைக்கு பெற்றவர்களுடனான குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் முதல் நாள் தொடக்கம் 14 நாட்களுக்கு முன்னர் மாதாந்த வாடகையை செலுத்த முடியாவிட்டால் வாடகைக்கு பெற்றவரிடம் இருந்து மாதாந்த வாடகையில் 20 சதவீத தண்டப்பணம் அறவிடப்படுகிறது. சில குத்தகைக்கு பெற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கான கொடுப்பனவை 03 மாத காலத்திற்கும் மேலாக தாமதப்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் தாமதமாக கொடுப்பனவு செய்தமைக்காக அவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>• எஞ்சினுய்டி பிறைவேட் லிமிட்டட்<br>• சமீரா கேட்டரர்ஸ் | இந்த உட்பிரிவுகள் அனைத்து உடன்படிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நடைமுறையொன்றாக நாங்கள் தண்டப்பணத்தை அறவிடுவதில்லை. இப்பிரச்னை தொடர்பாக முகாமைத்துவத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசித்துள்ளோம். | குத்தகை உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தாமதமான குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு தண்டப்பணம் விதிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டல் கையேட்டின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஆகியன பொதுத் திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பதிவு செய்வதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. | நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டல் கையேட்டின் மூலம் வழிகாட்டப்பட்டவாறு அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஆகியன பொதுமுயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமானது மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு செயற்படும் திட்டமாக இருக்க வேண்டும். கம்பனியின் பயனுள்ள செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக இது தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மூன்றாண்டு காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி தொடக்கத்தில் இருந்து கூட்டிணைந்த திட்டத்தை பேணியிருக்கவில்லை. நாங்கள் வழமையான கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளோம். | நல்லாளுகைக்கான பொது தொழில்முயற்சிகள் வழிகாட்டல் கையேடு மூலம் வழிகாட்டப்பட்டவாறு கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

2021 ஆம் ஆண்டில் கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிர்வாக கொள்வனவுகளிற்காக பொருள் பெறப்பட்ட தகவலை கம்பனி வைத்திருக்காததுடன் ஆதாரப்படுத்தல் மூலம் அது நிரூபிக்கப்படவில்லை. | இந்த நடைமுறை 2022.01.01 முதல் அமுலுக்கு வரும் வகையில் அமுல்ப்படுத்தப்பட்டது. | கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்தும் நிர்வாக கொள்வனவுகளுக்காக பொருள் பெறப்பட்ட தகவலை வைத்திருப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | பேணப்படும் நடைமுறைகளின் பிரகாரம் களஞ்சியத்தில் இருந்து ஏதேனும் மூலப்பொருட்களை வழங்குவதற்கு முன்னர் MIR (மூலப்பொருள் வழங்கல் கோரிக்கை) பெறப்பட வேண்டும். எனினும், சில சந்தர்ப்பங்களில், கோரப்பட்ட வேலை பூர்த்தியடைந்த பின்னர் MIRs வழங்கப்பட்டிருந்தன. | கொவிட் 19 பூட்டுதல் காலங்களில், அத்தியாவசிய பதவியணியினர் மாத்திரமே கட்டிடத்தில் இருந்தனர். அந்த காலப்பகுதியில் தற்காலிக வழங்கல் புத்தகத்தைப் பயன்படுத்தி அவசர காலங்களில் களஞ்சியங்களில் இருந்து சில மூலப்பொருட்கள் பெறப்பட்டன. சம்பந்தப்பட்ட நபர் கட்டிடத்திற்கு திரும்பிய போதுதான் MIRs அதிகரித்தன. | கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்தும் எந்தவொரு மூலப்பொருட்களையும் களஞ்சியங்களில் இருந்து வழங்குவதற்கு முன்னர் MIR (பொருள் வழங்கல் கோரிக்கை) ஐ வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | கம்பனியால் வழங்கப்படும் சேவை தொடர்பாக வாடிக்கையாளரின் கருத்துக்களை சேகரிக்கும் நடைமுறையை கம்பனி நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. எனினும் கம்பனியால் வழங்கப்படும் பின்வரும் சேவைகளுடன் குத்தகைக்கு பெற்றவர்கள் திருப்தியடையவில்லை.<br>• நிறுத்துமிட அங்கீகாரங்கள் பெரிய வாகனங்களுக்கு மாத்திரமே காணப்படுகிறதுடன் எந்த வாடிக்கையாளர் நிறுத்துமிட வசதியும் காணப்படவில்லை.<br>• A/C இயந்திரங்கள் சரியாக வேலை செய்யவில்லை.<br>• சில சேவைகள் ஒருவரைச் சார்ந்துள்ளது. | இந்த செயன்முறை 2022 யூலை முதல் அமுலுக்கு வரும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.<br><br>நாங்கள் வருடத்திற்கு இரண்டு முறை “பின்னூட்டல் படிவம்“ மூலம் குத்தகைதாரர்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுகிறோம். | வாடிக்கையாளரின் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப சாத்தியமான மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |